உ

# அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

( நான்காம் படைவீடு )

சுவாமிமலை-612 302.



# மகா கும்பாபிஷேக பெருவிழா அழைப்பிதழ்

நாள் : 09-09-2015 புதன்கிழமை

# அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

## ( நான்காம் படைவீடு )

**சுவாமிமலை,** கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

# மகா கும்பாபிஷேக பெருவிழா

**விநாயகர் துதி**

எண்கொடுத்த மன்னெத்தக மெண்ணிய
வண்கொடுத்த வரம்பெறு வாய்மையார்
கண்கொடுத்த கணபதி தாள்மலர்
பண்கொடுத்த மொழியால் பகருவாம்

**ஸ்ரீ நாகபரமேசுவரர் துதி**

ஊரிலான் குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க்கடவுளாய் என்றுமே நின்றான்

**ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் துதி**

பூதி நாயகன் பூத நாயகன்
காசி நாயக னாதிக் கடவுளார்
காசி நாயக னெங்கள் கண்ணியா
தேவி நாயகன் சேவடி பேற்றுவாம்.

**முருகன் துதி**

தீரகத்தே தனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுருகன் அடிகள் ஏத்துவாம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.



**திருப்புகழ்**

காமியத்தழுந்தி இளையாதே
காலன் கைப்படிந்து மடியாதே
ஓமெழுத்தில் அன்பு மிகவூறி
ஓவியத்தில் அந்தம் அருள்வாயே
நாமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத்தமர்ந்த பெருமாளே.

**ஸ்ரீ சுவாமிநாதசுவாமி துதி**

பூமாது புணர்மாலும் போற்றரிய மூவிலை வேல் புனிதன் கேட்ப
வோமாதி மந்திரத்தி னுண்மையெலா முணர்ந்து முறையுரைத்துக்காட்டி
ஆமாதி யந்தமிலா வைந்தொழிலுங் கடவி யப்பாலறியா நிற்குங்
கோமானை பேரகத்திலுறை சுவாமி நாயகனைக் குறித்து வாழ்வோம்.

பேரன்புடையீர்!

சோழவள நாட்டின் பொன்னி நதியாம் காவிரியின் வடகரையில் அமையப்பெற்று நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையில் காணும் ஆறுபடை வீடுகளில் நான்காவதாக அமையப்பெற்ற திருவேரகம் ஆகிய இச்சுவாமிமலை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் தன்னிகரற்றுத் திகழ்கின்றது. அகத்தே காணும் ஆறு ஆதாரத் தலங்களில் திருவேரகம் அநாகதத்தலமாக அமைந்துள்ளது. முருகன் நின்ற திருக்கோலத்தில் தண்டு ஊன்றி தண்டபாணி நிலையிலேயே தந்தைக்கு உபதேசித்த குருநாதனாக இங்கே எழுந்தருளியுள்ளார். தன்னை வழிபடும் அடியார்களுக்குப் பிணி, பகை, குறை தீர்த்து பிறவிப்பிணிக்கு மருந்தாய் பெருமான் அருள்புரிந்து வருகின்றார். ஓம் என்னும் பிரணவ வடிவனான அருள்மிகு சுவாமிநாதப் பெருமான் ஞானதேசிகனாய் நானிலத்தோர் உய்ய காவிரி வடபால் அமைந்தும், பிரபவ முதல் அட்சய வரையிலான தமிழ் வருட அறுபது தேவதைகளும் திருப்படிகளாக அமையப்பெற்றுள்ளது. கி.பி.15-வது நூற்றாண்டில் வாழ்ந்த முருகனருள்பெற்ற ஸ்ரீ அருணகிரிநாதரும் இத்தலம் போந்து அருள்மிகு சுவாமிநாதப் பெருமானை தரிசித்துத் திருப்புகழ் பாடி பாத தரிசனம் கண்டருளியுள்ளார். பிரமன், இந்திரன், கார்த்தவீரியார்சுனன், வசு, சோழ மன்னன், பாண்டியன் முதலியோர் வழிபட்டுய்ந்தனர். இத்தகு பெருமைகள் யாவும் ஒருங்கே அமைந்த சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் நிறைவுப்பெற்று சகல மூர்த்திகட்கும்



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் சீர்மிகு நல்லாட்சியில்...

**நிகழும் மன்மத வருடம் ஆவணி மாதம் 23-ம் தேதி (09-09-2015) புதன்கிழமை ஏகாதசி திதி புனர்பூச நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 5.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள் சிம்ம லக்னத்தில்** எல்லாம் வல்ல சிவபரம்பொருளின் திருவருளாலும் நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு யாகசாலை பூஜைகள் நடைபெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மடாதிபதிகள், அறநிலையத்துறை அதிகாரிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்த பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகைதந்து சிறப்பிக்க உள்ளனர். தாங்களும் **மகா கும்பாபிஷேக பெருவிழாவில்** கலந்து கொண்டு எல்லாம் வல்ல **அருள்மிகு சுவாமிநாத சுவாமியை** தரிசித்து திருவருள் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**செ.மாரியப்பன்** பி.எஸ்.சி., எம்.எல்.,
உதவி ஆணையர்/ செயல் அலுவலர்
துணை ஆணையர் / செயல் அலுவலர் (கூ.பொ)

**த.கஜேந்திரன்** எம்.ஏ.,பி.எல்.,
தக்கார் / இணை ஆணையர்

**மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்**

# நிகழ்ச்சி நிரல்

நிகழும் மங்களகரமான மன்மத வருடம் ஆவணி திங்கள்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|---|
| 17 | 03.09.2015 | 5.30 மணி | அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தனபூஜை |
| | வியாழன் காலை | 6.00 மணி | மஹா கணபதி ஹோமம். |
| | | | நேத்ர விநாயகர் அபிஷேகம் ஆராதனை |
| 18 | 04.09.2015 | 8.00 மணி | லக்ஷ்மி ஹோமம், நவக்கிரகஹோமம் |
| | வெள்ளி காலை | 10.00 மணி | வாஸ்து சாந்தி |
| | மாலை | 6.00 மணி | பிரவேச பலி |
| | | 7.30 மணி | ரக்ஷோக்ன ஹோமம் |
| | | 8.00 மணி | சாந்தி ஹோமம். திசாஹோமம் |
| 19 | 05.09.2015 | 8.00 மணி | மிருத்ஸங்கிரகணம் |
| | சனி காலை | 10.30 மணி | யாகசாலை அலங்காரம். |
| | மாலை | 6.00 மணி | அங்குரார்பணம் |
| | | 7.30 மணி | ஸ்தலக்ஷர்கள் ரக்ஷாபந்தனம் |
| 20 | 06.09.2015 | 8.00 மணி | காவிரியிலிருந்து தீர்த்த ஸங்கிரகணம் |
| | ஞாயிறு காலை | 10.00 மணி | யாகசாலை தானிய ஸ்தாபனம் |
| | மாலை | 4.00 மணி | பிரசன்னாபிஷேகம் |
| | | 4.15 மணி | கும்பஸ்தாபனம் |
| | | 6.00 மணி | கலாகர்ஷணம், யாத்ராதானம் |
| | | 7.00 மணி | யாகசாலை பிரவேசம், மண்டப பூஜை,வேதிகார்ச்சனை |
| | | 8.00 மணி | ஷண்ணவதி, திரவியாஹுதி |
| | | 8.30 மணி | முதல் கால பூர்ணாஹுதி |
| | | 9.00 மணி | உபசாரங்கள், தீபாராதனை |
| 21 | 07.09.2015 | 7.00 மணி | விசேஷ சந்தி |
| | திங்கள் காலை | 7.30 மணி | பாவனாபிஷேகம் |
| | | 9.00 மணி | மண்டப பூஜை, வேதிகார்ச்சனை |
| | | 10.00 மணி | அக்னி விபஜனம் |
| | | 10.30 மணி | ஷண்ணவதி,திரவியாஹுதி |
| | | 12.00 மணி | இரண்டாம் கால பூர்ணாஹுதி, உபசாரங்கள், தீபாராதனை |
| | மாலை | 5.30மணி | விசேஷ சந்தி |
| | | 6.00 மணி | பாவனாபிஷேகம் |
| | | 6.30 மணி | மண்டப பூஜை, வேதிகார்ச்சனை |
| | | 7.15 மணி | மூல மந்திர ஹோமம் |
| | | 9.00 மணி | மூன்றாம் கால பூர்ணாஹுதி உபசாரங்கள், தீபாராதனை |
| 22 | 08.09.2015 | 8.00 மணி | விசேஷ சந்தி |
| | செவ்வாய் காலை | 8.30 மணி | பாவனாபிஷேகம் |
| | | 9.00 மணி | யாகபூஜை ஆரம்பம், மண்டபபூஜை வேதிகார்ச்சனை |
| | | 10.30 மணி | ஹோமம் ஆரம்பம்,சமித்து, அன்னம், ஆஜ்யம், பழம், திரவியாஹுதி |
| | | 12.00 மணி | நான்காம் கால பூர்ணாஹுதி, உபசாரங்கள் ,தீபாராதனை |

tnhrce.org

| | தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|---|---|
| [illegible] மங்களகரமான மன்மத ஆண்டு ஆவணி திங்கள் | | மாலை | 5.30 மணி | ஆசார்ய விசேஷ சந்தி |
| | | | 6.15 மணி | பாவனாபிஷேகம் |
| | | | 6.30 மணி | மண்டப பூஜை வேதிகார்ச்சனை |
| | | | 7.30 மணி | விசேஷ ஹோமங்கள் திரவியாஹுதி |
| | | | 9.00 மணி | ஐந்தாம் கால பூர்ணாஹுதி, உபசாரங்கள்,தீபாராதனை |
| | 23 | 09.09.2015 புதன் அதிகாலை | 4.00 மணி | பாவனாபிஷேகம், தீபாராதனை |
| | | | 4.15 மணி | யாகபூஜை ஆரம்பம் மண்டப பூஜை, வேதிகார்ச்சனை |
| | | | 4.30 மணி | ஷண்ணவதி, திரவியாஹுதி, |
| | | | 5.00 மணி | நாடி சந்தானம், ஸ்பர்சாஹுதி |
| | | | 5.15 மணி | பரிவார பூர்ணாஹுதி, தீபாராதனை |
| | | | 5.30 மணி | பிரதானயாக மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை |
| | | | 5.45 மணி | யாத்ராதானம், கிரஹப்ரீதி |
| | | | 6.00 மணி | கடம் புறப்பாடு |
| | | | 6.30 மணி | அனைத்து விமான மஹா கும்பாபிஷேகம் |
| | | | 6.45 மணி | **அருள்மிகு சுவாமிநாத சுவாமி ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் தீபாராதனை பிரசாதம் வழங்குதல்** |
| | | மாலை | 5.00 மணி | மஹா அபிஷேகம் ஆரம்பம் ஸ்நபன பூஜை ஹோமம் முதலியன |
| | | | 6.30 மணி | **மூலஸ்தான மூர்த்திகளுக்கு மஹா அபிஷேகம், தீபாராதனை** |
| | | இரவு | 8.00 மணி | பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா காட்சி |

tnhrce.org

விழா நாட்களில் வேத பாராயணம், தேவார பாராயணங்கள்,
சிறப்பு நாதஸ்வர இன்னிசை, சமய சொற்பொழிவுகள்,
இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறும்.

சர்வசாதகம் :

**சிவஸ்ரீ.வை.நாகராஜ குருக்கள்**
**மற்றும் திருக்கோயில் அர்ச்சகர்கள்**

மங்கள இசை :

திருக்கோயில் நாதஸ்வர வித்வான்
**S.மணிமாறன் & குழுவினர்கள்**



திருக்கோயில் யாகசாலை பூஜைகள் மற்றும் மஹா கும்பாபிஷேகத்தில்
பங்குகொள்ள விரும்பும் உபயதாரர்கள் நன்கொடையாளர்கள்
தாங்கள் விரும்பும் பூஜையில் பங்குகொள்ள வரவேற்கப்படுகிறார்கள்
நன்கொடைகளை திருக்கோயிலின் அலுவலகத்தில் செலுத்தி
ரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறோம்


திருக்கோயில் தொடர்பு முகவரி :

**துணை ஆணையர் / செயல் அலுவலர்**

அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில்,

**சுவாமிமலை - 612 302.**

**☎0435 - 2454421, 2454358**

www.swaminathasswaytemple.org

www.swaminathaswamytemple.tnhrce.in

e-mail : swamymalaimurugan@tnhrce.org


**IOB Bank A/C No. 021701000001715**